- பாதுகாப்பானது • வசதியானது • வேகமானது
- வாடிக்கையாளர்களுடன் நட்புறவு




# ரொக்கமற்ற பரிவர்த்தனை

## பினாங்கு நீர் கட்டணம்

- நீங்கள் பினாங்கு நீர் கட்டணத்தை PBAPP வாடிக்கையாளர் சேவை மைய கவுண்டரில் தொலைப்பேசி செயலியைப் பயன்படுத்தி “QR Pay”, கிரெடிட் மற்றும்/அல்லது டெபிட் கார்டு கொண்டு ரொக்கமற்ற பரிவர்த்தனையை மேற்கொள்ளலாம்.
- மேலும், “myPBA” செயலி (ஆப்பிள் ஆப் ஸ்டோர் அல்லது கூகிள் ஸ்டோரிலிருந்து), “myPBA” ஆன்லைன் போர்டல் அல்லது JomPAY வழியாக வீட்டிலிருந்தே உங்கள் நீர் கட்டணத்தைச் செலுத்தலாம்.

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
Meeting all your water supply needs

Level 32, KOMTAR, Jalan Penang, 10000 George Town,
Pulau Pinang, Malaysia.
24-hour Call Centre : 04 255 8 255
Email : customer@pba.com.my | www.pba.com.my

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
Meeting all your water supply needs




2025 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டு தனிநபர் பயன்பாட்டு இலக்கு

**பினாங்கின் தனிநபர் உள்நாட்டு நீர் பயன்பாடு 2024 ஆம் ஆண்டில் 261 LCD ஆக இருந்தது.**

PBAPP வாரியம் “2025 ஆம் ஆண்டிற்கான 250 LCD (லிட்டர்/கபிதா/நாள்)” என்ற நியாயமான இலக்கை நிர்ணயித்துள்ளது, ஏனெனில்:

- 2024 ஆம் ஆண்டில் 261 LCD என்பது தேசிய சராசரியான 237 LCD ஐ விட அதிகமாகும், மேலும் 2023 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் அறிவித்த 141 LCD-ஐ விட மிக அதிகமாகும்.
- பினாங்கின் நீரின் பயன்பாடு 2014 இல் ஒரு நாளைக்கு 813 மில்லியன் லிட்டரிலிருந்து (MLD) 2024 இல் 870 MLD ஆக அதிகரித்துள்ளது.
- 2024 இல் பினாங்கில் மொத்த பயன்பாட்டில் உள்நாட்டு பயன்பாடு 54% ஆகும்.
- பருவநிலை மாற்றம் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழைப்பொழிவை கணிக்க முடியாததாகவும் மற்றும் சீரற்றதாகவும் அமைகிறது.
- எனவே, நீடித்த வறட்சி காலங்கள் மற்றும் எல் நினோ மாற்றத்தின் போது நீர் நெருக்கடியை எதிர்கொள்ளும் அபாயங்கள் அதிகம்.
- “பினாங்கு2030” கொள்கையான “தேசிய ரீதியில் பிரமிக்கும் குடும்பத்தை மையமாகக் கொண்ட பசுமை மற்றும் விவேக மாநிலத்தை உருவாக்குதல்” அடைய பினாங்கில் போதுமான நீர் இருக்க வேண்டும்.

# நீர் சேமிப்புக் குறிப்புகள்

உங்கள் நீர் கட்டணத்தில் பணத்தை சேமிப்பது பற்றி சிந்தியுங்கள். உண்மையில், 2025 ஆம் ஆண்டில் உங்கள் தனிநபர் உள்நாட்டு பயன்பாட்டை 250 LCD ஆகக் குறைப்பது கடினம் அல்ல. பின்வரும் எளிய நீர் சேமிப்பு குறிப்புகளைப் பின்பற்றி நடைமுறையில் ஈடுபடவும்:

- குழாயில் நீரை வழிய விடாதீர், கழுவும்போது மட்டுமே குழாயைத் திறக்கவும்
- உங்கள் பிள்ளைகளுக்குக் குழாய்களை முறையாக அடைக்க கற்றுக்கொடுங்கள். அவர்கள் நீரைச் சேமிக்க உதவுவர்.
- உங்கள் தோட்டம் மற்றும் செடிகளுக்கு நீர்க்குழாய்க்குப் பதிலாக நீர்ப்பாசன கேனைப் பயன்படுத்தி நீரைப் பாய்ச்சவும்.
- உங்கள் கார் அல்லது மோட்டார் சைக்கிள்களை கழுவ நீர்க்குழாயைப் பயன்படுத்தாதீர்கள், அதற்குப் பதிலாக வாளி, ஈரமான துணி அல்லது ‘sponge’ பயன்படுத்தவும்.
- உங்கள் வாகனத்தை அடிக்கடி கழுவதைக் குறைக்கவும். முடிந்தால், அழுக்கை மட்டுமே துடைக்கவும்.
- கசிவு ஏற்படும் நீர்க்குழாய்கள் / குழாய்களை உடனடியாக பழுதுப் பார்க்கவும்.
- உங்கள் தாழ்வாரம் அல்லது நடைபாதையை நீர்க்குழாய்க் கொண்டு கழுவுவதற்குப் பதிலாகத் துடைப்பம், விளக்குமாறு, தூசி பான் மற்றும் வெற்றிட கிளீனர் கொண்டு சுத்தம் செய்யவும்.
- ஒவ்வொரு பயன்பாட்டிலும் நீரைச் சேமிக்க உதவும் “நீர் சேமிப்பு சாதனங்களை” (WSD) பொருத்தவும். WSD-ஐ குழாய் மற்றும் ஷவர், டூயல்-ஃப்ளஷ் கழிப்பறை அமைப்புகள் மற்றும் சலவை இயந்திரங்கள் ஆகியவற்றில் பொருத்துதல்.
- கழிவறைக்குள் குப்பைகளை வீசாதீர்கள். தயவுசெய்து குப்பைத் தொட்டியைப் பயன்படுத்தவும்.

**சாலையோர நீர்க்குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகளை உடனடியாகப் புகாரளிக்க PBAPP 24 மணிநேர சேவை மையத்தை (தொலைபேசி: 04 255 8 255) அழைக்கவும்.**









**2024 ஆம் ஆண்டில், சுமார் 1.8 மில்லியன் பினாங்குவாழ் மக்கள் ஒரு நாளைக்கு சராசரியாக 471 மில்லியன் லிட்டர் நீரை (MLD) பயன்படுத்துகின்றனர்.**







**ஒவ்வொரு பினாங்குவாழ் மக்களும் தனது தனிநபர் உள்நாட்டு பயன்பாட்டை 2024 இல் 261 LCD இலிருந்து 2025 இல் 250 LCD ஆகக் குறைத்தால், பினாங்கு சுமார் 19.8 MLD ஐ "சேமிக்கும்".**

- 19.8 MLD நீர் என்பது 13.2 மில்லியன் 1.5 லிட்டர் (பெரிய) குடிநீர் பாட்டில்கள் அல்லது 8 ஒலிம்பிக் அளவிலான நீச்சல் குளங்களை நிரப்ப முடியும்.
- ஒரு நாளைக்கு 11 LCD சேமிப்பதன் மூலம் (வீட்டில் 4.2% குறைவான நீரைப் பயன்படுத்துவதன் மூலம்), பினாங்கின் நீர் அபாயங்களைக் குறைக்கவும், நீடித்த வறண்ட காலங்களில் போதுமான நீர் விநியோகத்தை உறுதி செய்யவும், "பினாங்கு2030" கொள்கையை நனவாக்குவதற்கும் உதவுவீர்கள்.



பினாங்கு “பினாங்கு2030” கொள்கையை நோக்கி முன்னேறிச் செல்லும்போது, அதிகமான மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை ஆதரிப்பதற்கும் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் அதிக நீர் விநியோகம் தேவைப்படும்.

2024 ஆம் ஆண்டில் பினாங்கு சுமார் 870 MLD சுத்திகரிக்கப்பட்ட நீரைப் பயன்படுத்தியது. 2030 ஆம் ஆண்டில் இப்பயன்பாடு 1,103 MLD, 2040 ஆம் ஆண்டில் 1,356 MLD மற்றும் 2050 ஆம் ஆண்டில் 1,568MLD அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டில், பினாங்கில் PBAPP சராசரியாக 1,208 MLD சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்துள்ளது. வருவாய் அல்லாத நீர் (NRW) சதவீதம் 28% ஆக இருந்த நிலையில், உண்மையான பயன்பாட்டு கட்டணம் 870 MLD ஆக இருந்தது.

28% நிலையான NRW சதவீதத்துடன் மேம்பாட்டுத் திட்டம்:

- 2030 ஆம் ஆண்டுக்குள், 1,103 MLD பயன்பாட்டைப் பூர்த்தி செய்ய PBAPP 1,532 MLD விநியோகிக்க வேண்டும்.
- 2040 ஆம் ஆண்டுக்குள், 1,356 MLD பயன்பாட்டைப் பூர்த்தி செய்ய PBAPP 1,884 MLD விநியோகிக்க வேண்டும்.
- 2050 ஆம் ஆண்டுக்குள், 1,568 MLD பயன்பாட்டைப் பூர்த்தி செய்ய PBAPP 2,178 MLD விநியோகிக்க வேண்டும்.

**தேவையைப் பூர்த்திச் செய்ய PBAPP மற்றும் மத்திய அரசு இணைந்து ரிம6.6 பில்லியன் திட்டமிடப்பட்ட மொத்த முதலீட்டில் 13 புதிய நீர் விநியோகத் திட்டங்களை மேற்கொள்ளும்.**

- செபராங் பிறையில் அதிகபட்ச நீர் சுத்திகரிப்பு திறனை 478 MLD ஆக அதிகரிப்பதற்கும், சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பினாங்கு தீவுக்கு அதிகமான நீரை பம்ப் செய்வதற்கும் PBAPP 6 நீர் தற்செயல் திட்டம் 2030 (WCP 2030) அமலாக்கம்;
- நீடித்த வறண்ட காலங்களில் நீர் அபாயங்களைக் குறைப்பதற்கான 6 மத்திய அரசு திட்டங்கள் அமலாக்கம்; மற்றும்
- பினாங்கு, பேராக்கிலிருந்து சுமார் 250 MLD சுத்திகரிக்கப்பட்ட நீரை வாங்க “பேராக்-பினாங்கு நீர் திட்டம்” உதவும்.

எதிர்காலத்திற்கான நீர் விநியோகத்தை PBAPP நிர்வகிக்கும் அதே வேளையில், பினாங்கு மக்களும் தங்கள் நீர் பயன்பாட்டை நிர்வகிப்பது அவசியமாகும்.

நீர் விநியோக உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு பில்லியன் கணக்கான ரிங்கிட் செலவாகுவதால், எதிர்காலத்தில் பினாங்கு நீர் பயனீட்டாளர்களால் செலுத்தப்படும் பினாங்கு நீர் கட்டணங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

மேலும், நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலம், பினாங்கு நீர் பயனீட்டாளர்கள் தங்கள் நீர் கட்டணங்களில் இருந்து பணத்தைச் சேமிக்கலாம் மற்றும் எதிர்கால நீர் கட்டணங்களைக் குறைக்க உதவலாம்.